**அன்பு பாலம் இதழ் (பிப்ரவரி 2020)**
**முன்னாள் மேயர் மனித நேயர் சைதை துரைசாமி ஐயாவைப் பற்றி**
**"முகவரி" ரமேஷ்**

முகவரி ரமேஷ்



# இது பூர்வ ஜென்ம பந்தம்

சொல்லுக்கும், செயலுக்கும் யாரால் இடைவெளி இல்லாமல் நடக்க முடிகிறதோ அவரை தோற்கடிக்க முடியாது என்ற மகாத்மா காந்தியின் கூற்றுக்கு ஏற்ப வாழ்ந்து கொண்டு, வழிகாட்டும் மனிதநேயர் சைதை துரைசாமி ஐயாவைப்பற்றி எழுதுவது என்பது என்னை போன்ற சாதாரண மனிதனுக்கு மகிழ்ச்சிதானே... காரணம் சைதை துரைசாமி ஐயா அவர்களுக்கும் எனக்குமான உறவு என்பது தந்தை மகன் உறவு போன்றது. இதை எவ்வளவு முயன்று எழுதினாலும் ஒருபோதும் சொல்லுக்குள் அடக்கிவிடமுடியாத உறவென்றுதான் சொல்லவேண்டும். அந்த அளவுக்கு உன்னதமானது, உயிர்ப்பானது. இருப்பினும் என் அனுபவங்களில் சில...



என் சிறு வயதிலேயே அதாவது நான் 7ஆம் வகுப்பு படித்துக் கொண்டிருந்த காலக்கட்டதிலேயே எங்கள் ஊரில் உள்ள தேனீர் கடை, சலூன் கடை சென்று ஒரு நாள் கூட தவறாமல் செய்தித்தாள் படிக்கும் பழக்கம் எனக்குள் ஏற்பட்டது. இதற்கு காரணம் என் தாய் மாமா அரசியலில் இருந்ததால், தவறாமல் தராசு, ஜுனியர் விகடன் போன்ற அரசியல் சார்பான இதழ்கள் எங்கள் வீட்டில் எப்போதும் இருக்கும். அப்படி ஒரு நாள் செய்தித்தாள் படித்து கொண்டிருந்தபோது முதல் முறையாக சைதை துரைசாமி ஐயா பற்றிய செய்தி படிக்க நேர்ந்தது. அவரது பெயரும் என் தாய் மாமா பெயரும் ஒன்று என்பதாலோ என்னவோ சட்டென அவரது பெயரும் முகமும் மனதுக்குள் ஒட்டிகொண்டது. இப்படித்தான் எனக்குள் அறிமுகமானார் மனித நேயர் சைதை துரைசாமி ஐயா அவர்கள்.

அப்படி, நான் படித்த செய்தி என்ன? தமிழக சட்டமன்ற வரலாற்றில், தான் சட்ட மன்ற உறுப்பினராக இருந்த வெறும் 3 ஆண்டுகளில் (1984-1987), ஏன்? தான் ஆளுங்கட்சி உறுப்பினராக இருந்த போதிலும், அதிக கேள்விகள் மற்றும் அதனைச்சார்ந்த துணை கேள்விகள் கேட்டு மக்களுக்கு பயன்படும் படியான திட்டங்களை கொண்டு வந்தவர் என சைதை துரைசாமி ஐயா பற்றின நான் படித்த முதல் செய்தியாகும். இது வெறும் செய்தி மட்டும் இல்லை, இன்று வரை இச்சாதனையை யாரும் முறியடிக்கவில்லை என்பதே அவரது சட்டமன்ற செயல்பாட்டிற்க்கான சாட்சியாக இன்றும் இருக்கு...

இந்த செய்தியின் தாக்கமே தின, வார இதழ்கள் என எதில் அவரை பற்றிய செய்தி வந்தாலும் தவறாமல் படித்துவிடுவேன். அவர் கடைப்பிடிக்கும் யோகா, இயற்கை உணவு பற்றின செய்தி, புரட்சித்தலைவர் MGR மேல் கொண்ட அளவு கடந்த பக்தியினால், தன்னுடைய 22வது வயதிலேயே எதற்கும் அஞ்சாமல் அப்போது முதல்வராக இருக்கும் கருணாநிதி அவர்களுக்கு எலுமிச்சை பழ மாலை போட்ட செய்தி, எல்லாவற்றையும் தாண்டி தான் சட்ட மன்ற உறுப்பினராக வருவதற்கு முன்பே பள்ளி, கல்லூரி படிக்கும் மாணவ, மாணவிகள் இலவசமாக *Xerox Copy* எடுத்து கொள்வதற்கு தன்னுடைய வீட்டிலேயே *Xerox Machine* ஏற்பாடு செய்திருந்த செய்தி என் ஆழ் மனதை தொட்டது. என்னை அறியாமல் அவரின் செயல்பாடுகள் எனக்குள் விதையாக ஊன்றப்பட்டுவிட்டது.

*அதன் பிறகு என்னுடைய பள்ளி படிப்பு, கல்லூரி படிப்பு எல்லாம் முடிந்து நான் சென்னை வந்த நேரத்தில் (2002 ல்) சென்னை பல்கலைக்கழக ஆடிட்டோரியத்தில் தமிழக அரசு சார்பாக ஒரு விழா நடைபெறுகிறது. அப்போது புரட்சி தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சர். அவர் விழாவிற்கு வந்திருந்து சிறப்பு நலத்திட்ட உதவிகளை ஏழை, எளியோருக்கு வழங்கினார். அவ்விழாவினை ஒருங்கிணைப்பு செய்தவர் அப்போதைய சென்னை அண்ணா தி.மு.க வின் மாவட்ட செயலாளர் சைதை துரைசாமி ஐயா அவர்களே. அவரை பற்றி செய்தி தாளில் படித்துக்கொண்டிருந்த நான், நேரில் தூரமாக இருந்து பார்க்கும் வாய்ப்பு கிடைத்தது. ஆனால் பேச முடியவில்லை. இதுவே எனக்கு சந்தோசமாக இருந்தது. இருந்தாலும் என் மனதிற்குள் என் வாழ்க்கையில் ஒரு தடவையாவது அவரை நேரில் சந்தித்து பேசிவிட வேண்டும் என்ற எண்ணமும் முதல் தடவையாக எனக்குள் உதித்தது.*

*2002 ல் ஒரு மாணவியை மருத்துவம் படிக்க வைக்க ஆரம்பிக்கப்பட்டது தான் முகவரி பவுண்டேஷன், இதற்காக நான் முதன் முதலாக (மே மாதம் 2003) சந்தித்த நபர் நம்முடைய பாலம் கல்யாணசுந்தரம் ஐயா அவர்களே. அப்போது அம்மாணவியை நாம் படிக்கவைத்துவிடலாம் என்று பாலம் ஐயா அவர்கள் எனக்கு ஊக்கம் கொடுத்தார். அதனை தொடர்ந்து என் இடைவிடாத முயற்சியால், ரமணா திரைப்பட*



*இயக்குனர் A.R.முருகதாஸ் அண்ணா அவர்கள்தான், அம்மாணவியின் 5 வருட மருத்துவ படிப்பிற்கான முழு செலவையும் ஏற்று, முகவரி பவுண்டேசன் என்ற விதையை ஆழமாக விதைத்தவர். அந்த காலகட்டத்தில் தொடர்ந்து இந்த நல்ல செயலை எப்படி நடத்துவது என்ற பயம் எனக்குள் அவ்வப்போது வரும்.*

*2002 ல் இருந்து 2006 வரை என் தொடர் போராட்டத்தினால், ஏதோ என்னால் முடிந்த அளவிற்கு 18 மாணவ மாணவிகள் உயர் கல்வி படிக்க ஏற்பாடு செய்திருந்தேன். ஒரு கட்டத்தில் என்னால் எதுவும் செய்ய முடியாமல் நாங்கள் தங்கி இருந்த இடத்திற்கு வாடகை தர முடியாமல் திண்டாடினோம். இச்சமயங்களில் சைதை துரைசாமி ஐயாவை பார்த்து முகவரிக்கு உதவி கேட்க ஆசை. அவர் அரசியலில் உள்ளாரே என்ற பயம் கலந்த தயக்கமும் எனக்குள் இருந்த காரணத்தினால் சந்திக்க முயற்சி செய்யாமலேயே இருந்தேன்.*

*அச்சமயத்தில் தான் ஜூன் 2006 ல் அவர் மனிதநேய அறக்கட்டளை ஆரம்பித்து இலவச IAS, IPS பயிற்சி*



*மையம் மூலம் அதிக அளவில் மனிதநேயமுள்ள நேர்மையான அதிகரிகளை உருவாக்க முயற்சி எடுத்து வந்தார். அத்துடன் ஏழை, எளிய மக்கள் திருமணம் செய்து கொள்ள புரட்சி தலைவி அம்மா இலவச திருமண மண்டபம் ஆரம்பித்தார். இச்செய்திதான் எனக்குள் இருந்த பயத்தை நீக்கி சைதை துரைசாமி ஐயாவை சந்தித்து நம் முகவரிக்கு உதவி கேட்கலாம் என்ற எண்ணத்தை மீண்டும் என்னுள் உதிக்க ஆரம்பித்தது.*

*அதன் விளைவாக 2007 ல் இரு முறை முயற்சி செய்தும், அவரை பார்க்க முடியவில்லை. ஒரு நாள் முகவரி பற்றின செய்திகளை விரிவாக எழுதி அப்போது ஐயாவிடம் உதவியாளராக இருந்த லோகு மற்றும் ரவியிடம் கொடுத்துவிட்டு வந்தேன். சரியாக இரண்டு நாட்களுக்கு பிறகு, முகவரி மாணவர் தம்பி வெற்றிவேலின் அலைபேசி எண்ணிற்கு தொடர்பு கொண்டு (என்னிடம் அப்போது அலைபேசி இல்லை) நான் சைதை துரைசாமி பேசுகிறேன் என சொல்லி, இப்போது நீ எங்கே இருக்கிறாய் என கேட்டு நாங்கள் இருக்கும் இடத்திற்கே தேடி வந்து, முகவரி பற்றின முழு விவரங்களையும் கேட்டறிந்து, உடனே அம்மா மண்டப வளாகத்திலேயே என்னுடன் தங்கியிருந்த 10 மாணவர்களும். தங்க இடம் மற்றும் உணவு கொடுத்து, அவர்களை படிக்க வைத்ததோடு மட்டுமல்லாமல், முகவரியை அடுத்தகட்டமாக கொண்டு செல்ல ஒரு தெளிவான பாதையை போட்டு கொடுத்தவர் தான் சைதை துரைசாமி ஐயா அவர்கள்.*

*அந்த நாள் என் வாழ் நாளில் மறக்க முடியாத நாளாகும். அந்த நாள் அக்டோபர் 4, 2007. இந்த நாளுக்கு பிறகுதான் முகவரிக்கான வளர்ச்சியே...நானும் எவ்வித பயமுமில்லாமல் செயல்பட ஆரம்பித்தேன். நான் வாழ்க்கையில் ஒரு தடவையாவது பார்த்து, பேசிவிட வேண்டும் என்று நினைத்த மனிதர் என்னையே தேடி வந்து தன்னோட சொந்த இடத்தில் தங்கிக்க சொல்லியதை என்னால் நம்ப முடியவில்லை. அந்த நொடி, தூய்மையான மனதில் வலிமையான எண்ணம் எதுவாக இருந்தாலும் அது கண்டிப்பாக ஒரு நாள் இல்லையென்றாலும், ஒரு நாள் நிச்சயம் நடக்கும் என உணர்ந்தேன். அது அனுபவ பூர்வமாக மனிதநேயர் திரு. சைதை துரைசாமி ஐயா ரூபத்தில் எனக்கு நடந்தது. அத்தருணத்தில், அரசியலில் அவர் இருக்கிறாரே என்ற தேவையற்ற பயம் கொண்டிருந்தேனே என்ற அறியாமை தான் என எனக்குள் தோன்றியது. அந்த அளவிற்கு அவர் எளிமையான மனிதர். முகவரிக்கு முகவரி கொடுத்து, அடுத்த பரிணாமத்திற்கு எடுத்து சென்ற*

முகவரியின் தந்தையாகத்தான் சைதை துரைசாமி ஐயாவை இன்றும் நான் பார்க்கிறேன். அக்டோபர் 4, 2007 லிருந்து இன்று வரை 12 வருடங்களில் இவரின் மனிதநேய விடுதியில் சுமார் 70 முகவரி மாணவர்கள் தங்கி படித்தனர், இன்றும் படித்தும் வருகின்றனர். இதில் 30 க்கும் மேற்பட்ட முகவரி மாணவர்கள் அரசாங்க பொறுப்பிற்கு சென்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

மனிதநேயர் சைதை துரைசாமி ஐயா அவர்களுக்கும் எனக்குமான உரையாடல்கள் அதிக பட்சமாக இரண்டு நிமிடங்கள் இருந்தாலே ஆச்சரியம்தான். நான் அவர் முன்னால் நிற்பேன்... என்ன என்பார்? சொல்வேன்.. உடனே என்ன செய்ய வேண்டுமோ அதை செய்வார். என்னை பார்த்ததுமே என் தேவையை புரிந்து கொள்வார். இது எப்படி நடக்கிறது என நினைத்தாலே எனக்கு ஆச்சரியமாகதான் இருக்கும்.

புரட்சி தலைவர் MGR ஆட்சிக்கு பிறகு (1984-1987), நீண்ட வருடங்களுக்கு பிறகு 2011 ம் ஆண்டு சட்ட மன்ற தேர்தலுக்கான வேட்பாளர் பட்டியலில் அவருடைய பெயர் இருந்ததை பார்த்து அவ்வளவு சந்தோஷப்பட்டேன். கொளத்தூர் தொகுதியில் ஸ்டாலின் அவர்களை எதிர்த்து நின்றார். நிச்சயம் வென்று விடுவார். இன்னும் பல ஆயிரம் பேருக்கு



உதவிகள் செய்யப்போகிறார் என்ற நம்பிக்கையோடு, லயோலா கல்லூரியில் வாக்கு எண்ணும் மையத்தில் காத்திருந்தேன். நான் எதிர் பார்த்ததுபோல் சுமார் 3000 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார் என அறிவித்ததும் நான் துள்ளி குதிக்காத குறைதான். சற்று நேரத்தில் சூழ்ச்சியின் காரணமாக தேர்தல் முடிவு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக சொன்னார்கள். அடுத்த சில நிமிடங்களில், தோல்வியை தழுவினார் என கூச்சமே இல்லாமல் அறிவித்த சமயம் உடைந்து போனேன். அன்று இரவு முழுக்க எவ்வளவு முயன்றும் தூக்கம் இல்லை.

அடுத்த நாள் காலை ஐந்து மணிக்கெல்லாம் அவரது வீட்டிற்கு சென்று அவருக்காக காத்திருந்தேன். சரியாக 6.05 மணிக்கு மாடியிலிருந்து கீழே இறங்கி, கொஞ்சம் கூட சோர்வோ, வருத்தமோ இல்லாமல் அதே வேகத்தோடும் புன்சிரிப்போடும் MGR பாடலை பாடிக்கொண்டு, அதே கம்பீர நடையுடன் நடந்து வந்தார். என்னை பார்த்து என்ன ரமேஷ்! காலையிலேயே எதாவது அவசர உதவியா என்று வாஞ்சையோடு கேட்டார். உடனே நான் உதவி கேட்டு வரவில்லை, தேர்தல் முடிவு என்னை தூங்கவிடாமல் செய்து விட்டது என்ற போது, என்னை அரவனைத்து நாம, நம்ம வேலைய செய்வோம், வெற்றி தோல்வி பற்றி நாம் யோசிக்க வேண்டாம் என்று சொல்லி என்னை, அவர் ஆறுதல் படுத்தியவிதம் 'இதுவும் கடந்து போகும்' என்று அவர் சொன்ன வார்த்தை இப்போதும் என் நெஞ்சில் ஆழ பதிந்துள்ளது. என்ன ஒரு பக்குவம் இம்மனிதருக்கு என ஒரு வித சிந்தனையுடன் அவ்விடத்தை விட்டு நகர்ந்தேன்.

அதே வருடத்தில் சென்னை மாநகர மேயராக அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று சாதனை புரிந்தார். இவர் வெற்றி பெற்றதை சென்னை மக்கள் ஒவ்வொருவரும் தாம் வெற்றி பெற்றதாகவே நினைத்தனர். அதற்கேற்றார்போல் சைதை துரைசாமி ஐயா அவர்கள், காலை 5.00 மணி முதல் இரவு 11 மணி வரை இடைவிடாமல் பணிகள் செய்து மக்களின் மேயர் என பெயர் பெற்றார். சென்னை மக்களுக்கு பல திட்டங்கள் அவர் செய்திருந்தாலும், எனக்கு பிடித்த நான் அனுபவபூர்வமாக உணர்ந்த ஒரு திட்டம்தான் அம்மா உணவகம். இது உருவான கதை அவரின் மனிதநேய சிந்தனைக்கு எடுத்துகாட்டாகும். தான் மேயராவதற்கு முன்பே சைதாப்பேட்டையில் மிக குறைந்த விலையில் (அசல்) மனிதநேய உணவகம் நடத்திவந்தார். நானும் அங்கே அடிக்கடி சென்று சாப்பிட்டு வந்திருக்கிறேன். இப்போது அவர் மேயரானதற்கு பின் அரசாங்கத்தின் மூலம் அம்மா உணவகம் உருவாக்கி ஏழை எளிய மக்கள் பட்டினியில் வாடாமல் இருக்கும் நிலையை உருவாக்கினார். அம்மா உணவகம் இந்தியாவை தாண்டி உலகம் முழுவதும் பெரும் புகழ் பெற்றது. இதற்கு காரணம், அவர் தன் தாயிடம் கற்றுகொண்ட மனித நேய சிந்தனையும் மற்றும் தன் தலைவர் MGR -ன் வளர்ப்புமே தான்... கண் கூடாக நான் பார்த்த கிராமப்புற



ஏழை மாணவர்கள் பலர், அம்மா உணவகத்தில் உணவருந்தி கஷ்டப்பட்டு படித்து IAS, IPS, Group 1 அதிகரிகள் ஆகியுள்ளனர். இதை விட வேறென்ன செய்து விட முடியும். இதனாலேயே இத்திட்டம் எனக்கு பிடிக்கும்.

முகவரி நிகழ்ச்சி அனைத்திற்கும் தவறாமல் வந்துவிடுவார். அவரை நான் முதன்முதலாக சந்தித்த அதே அக்டோபர் 4ம் தேதி அன்று முகவரி குடும்ப விழா, 2015 ம் ஆண்டு சென்னை, குருநானக் கல்லூரியில் ஏற்பாடு செய்திருந்தேன். (அக்டோபர் 3, 2013 அன்று டாக்டர் APJ அப்துல் கலாம் அவர்களை,

**மார்ச் 19, 2002 லிருந்து இன்று வரை 18 வருடங்களில் முகவரி பவுண்டேஷன் 437 மாணவ மாணவிகள் உயர் கல்வி பெற உதவி செய்துள்ளது. அதில் 112 பேர் மருத்துவ படிப்பு, 52 பேர் அண்ணா பல்கலைக்கழகத்தில் படிப்பு, 91 பேர் தனியார் துறையில் நல்ல பணி, 51 பேர் அரசாங்க துறையில் பணி என்பது குறிப்பிடத்தக்கது. இதெல்லாம் சாத்தியமானதற்கு அடிப்படையான காரணம், 18 மாணவர்களுடன் நான் திண்டாடிக் கொண்டிருந்த போது சைதை துரைசாமி ஐயா அவர்கள், 2007 லிருந்து இன்று வரை தொடர்ந்து எங்களுக்கு தங்க இடம் மற்றும் உணவு கொடுத்த காரணத்தினாலேயே... என் உயிர் மூச்சு இருக்கும் வரை மனிதநேயர் சைதை துரைசாமி ஐயா அவர்களுக்கு நான் நன்றி கடன் பட்டுள்ளேன். நன்றியுணர்வே என் வாழ்க்கை.**

*கிண்டி ராஜ்பவன் கவர்னர் மாளிகையில் நான் சந்தித்த போது யார், யார் முகவரிக்கு உதவி செய்கிறார்கள் என்று ஆர்வமுடன் கேட்டார். நான் சைதை துரைசாமி ஐயா உட்பட பலர் உதவி செய்வதை பற்றி விரிவாக சொன்னேன், சந்தோஷப்பட்டார். நான் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டார். முகவரி குடும்ப விழாவிற்கு வரும்படி வேண்டினேன். இவ்விழாவிற்கு டாக்டர் APJ அப்துல் கலாம் வருவதாக உறுதி அளித்திருந்தார், எதிர் பாராத விதமாக நம்மை விட்டு ஜூலை 27, 2015 ல் இறைவனடி சேர்ந்தமையால் அவரால் வர முடியாமலேயே போய்விட்டது.அப்துல் கலாம் ஐயா கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவதற்காக, அவரது நினைவுகளுடன் அவரது அறிவியல் ஆலோசகர் Dr. பொன்ராஜ் அண்ணா அவர்கள் விழாவிற்கு வருகை தந்து சைதை துரைசாமி ஐயா அவர்களை அப்துல் கலாம் சார்பாக கௌரவித்தார்.அப்போது படித்து கொண்டிருந்த முகவரி மாணவ மாணவிகள் அவர்களுடைய பெற்றோர்கள், மற்றும் முகவரிக்கு உதவியவர்கள் என சுமார் 1000 பேர் வந்திருந்தார்கள்.*

*சரியாக நிகழ்ச்சி ஆரம்பிப்பதற்கு சில நிமிடங்களுக்கு முன்பு வைதை துரைசாமி ஐயாவின் தந்தை இறந்து விட்டதாக அவருக்கு தகவல் வருகிறது. உடனே அவர் என்னிடம் எதுவும் சொல்லாமல், வீட்டினர் எல்லோரையும் தான் பிறந்த ஊரான தும்பிவாடி, கரூருக்கு முதலில் போக சொல்லிவிட்டு, முகவரி நிகழ்ச்சிக்கு வந்திருந்தார். இது எதுவுமே எனக்கு தெரியாது, கிட்டத்தட்ட 1 மணி நேரம் நிகழ்ச்சியில் இருந்தார். எவ்வித பதட்டமும் இல்லாமல் 30 நிமிடங்கள் தான் கடைபிடிக்கும் இயற்கை உணவைப்பற்றி மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி பேசினார். விழாவில் முகவரிக்கு உதவி செய்த அனைவரையும் சிறப்பித்துவிட்டு, வெளியில் போகும் போது என்னை தனியாக அழைத்து அப்பா தவறிட்டாரு, அதான் உடனே கிளம்புறேன். முழு நிகழ்ச்சியிலும் என்னால் இருக்க முடியல என்னை தப்பா எடுத்துக் கொள்ளாதே ரமேஷ்! என்று சொன்னதும் நான் உடைந்து போனேன். என்ன மனுஷன்டா இவரு தன்னை பெற்ற அப்பா இறந்து போன செய்தி தெரிந்தும் முகவரியின் அன்புக்காக இந்த நிகழ்ச்சி நின்றுவிட கூடாது என்று ஒரு வார்த்தை கூட சொல்லாமல் வந்து பொறுமையாக உட்கார்ந்து பேசிவிட்டு சென்றது விழாவிற்கு வந்த அனைவரையும் நெகிழவைத்தது. என்னை போன்ற சாதரணமானவர்கள் விழா நடத்த எவ்வளவு சிரமப்படுவார்கள் என்பதை அவர்கள் நிலையிலிருந்து சிந்திக்கும் மனிதநேயர் தான் இவர். அவரது இந்த அன்பிற்கு நான் எத்தனை ஜென்மம் எடுத்தாலும் என்னுடைய நன்றியை என்னால் செலுத்தவே முடியாது.*

*என் நேர்மையான செயலுக்கு எனக்கு பக்க பலமாக சைதை துரைசாமி ஐயா இருக்கிறார் என்பதால், எப்போதும் பயம் இல்லாமல், ஒருவித தைரியம் என்னுள் இருந்துக்கொண்டே இருக்கும். ஆனாலும் என் சுபாவம் எதையும் போராடி பெறுவது என்பதால் தொடர்ந்து முயற்சி செய்துகொண்டே இருப்பேன். தேவை இல்லாமல் அவர் பெயரை எங்கும் எப்போதும் எதற்கும் பயன்படுத்துவதில்லை.*

*சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம், தலைவாசல் ஒன்றியத்தில் உள்ள சிறிய கிராமம் ஆரத்தி அக்ரஹாரம் தான் என் சொந்த ஊர். எங்கள் ஊர் பள்ளி மாணவ மாணவிகள் சுமார் 70 பேர் ஐந்து கிலோமீட்டர் நடந்து சென்று படித்து வருகின்றனர். நானும் அப்படிதான் படித்தேன். இப்போதும் அதே நிலைதான் என பேச்சு வாக்கில் சைதை துரைசாமி ஐயாவிடம் சொன்னேன். கொஞ்சம் வருத்தத்துடன் இதற்காக பல போராட்டங்கள் நடத்தி பார்த்துவிட்டோம் என்றேன். இதெல்லாம் 09.09.2019 அன்று இரவு 7.30 மணிக்கு அவரிடம் சொல்கிறேன். அக்கணமே போக்குவரத்து அமைச்சருக்கு போன் செய்கிறார். நான் சொன்ன அனைத்து விபரங்களையும் சொல்லி அப்போதே நான், அமைச்சரை சந்திக்க ஏற்பாடும் செய்தார். அன்று இரவே 9.30 மணிக்கு கிரீன்வேஸ் சாலையிலுள்ள அமைச்சர் வீட்டில் அவரை சந்தித்து எங்கள் கிராமத்திற்கு பேருந்து தேவையை ஆதாரத்துடன் விவரித்தேன். பொறுமையாக கூர்ந்து கேட்டுக்கொண்ட அமைச்சர் அவர்கள், கவலைப்படாதீர்கள், உங்கள் ஊருக்கு பேருந்து வரும் என்றார். பேருந்து வசதியே இல்லாத எங்கள் ஊருக்கு சரியாக (5 நாட்களில்) 14.09.2019 அன்று பேருந்து வந்துவிட்டது. எங்கள் கிராம மக்கள் குறிப்பாக பள்ளி மாணவ மாணவிகள் மிகவும் மகிழ்ச்சி அடைந்தனர். இதற்கு நன்றி சொல்ல சைதை துரைசாமி ஐயா அவர்களை சந்திக்க சென்றிருந்தேன். நன்றி சொன்னேன்.. அதற்கு அவர் "நீ வேற நான் வேற இல்ல", அப்படின்னு சிம்பிளா சொல்லிட்டு போனாரு. எனக்கு அப்படியே கண்ணு கலங்கிடுச்சு. எனக்கு கிடைத்த வரம்தான் மனிதநேயர் சைதை துரைசாமி ஐயா அவர்கள்.*

*தன்னால் மற்றவர்களுக்கு முடிந்ததை செய்வது, ஆறுதல் கூறுவது என்பது மனித நேயம். அதையும் தாண்டி தனக்கு வரக்கூடிய உதவியையும், புகழையும் இன்னொருத்தருக்கு அவ்வளவு எளிதில் யாரும் கைகாட்டி விடமாட்டார்கள். ஆனால் சைதை துரைசாமி ஐயா அவர்கள் தனக்கென்று எதையும் எடுத்துக்கொள்ளாமல்,*

அது யாருக்கு போய் சேர வேண்டும் என சரியாக கணித்து, அவர் கை காட்டிவிட்ட பல உதவிகள் முகவரியை வந்து சேர்ந்திருக்கின்றன. ஒருவருக்கு எவ்வளவு பெரிய நல்ல மனது இருந்தால், இது போல் இருப்பார் என நான் வியந்து பார்க்கும் பெருந்தன்மையான மனிதர் தான் சைதை துரைசாமி ஐயா அவர்கள். இதுமட்டுமல்லாமல் தன் குடும்பத்தாரிடமும் முகவரி பற்றின செயல்பாடுகளை அவ்வப்போது சொல்வதாக கேள்விப்பட்டுள்ளேன். அதன் தாக்கமாக அவரது ஒரே மகனான வெற்றி துரைசாமி அவர்கள் தனிப்பட்ட முறையில் முகவரி பவுண்டேசன் வழியாக ஒரு மருத்துவ மாணவரை படிக்கவைக்கிறார். தன்னை சுற்றியுள்ளவர்களையும் தேவையானவர்களுக்கு உதவிச்செய்ய தூண்டுபவர்தான் மனிதநேயர் சைதை துரைசாமி ஐயா அவர்கள்.

இதுவரைக்கும் நான் பல பேருக்கு உதவி கேட்டு போயிருக்கேன், எதையும் அவர் மறுத்ததில்லை. உடனே செய்து கொடுத்துவிடுவார். நான் தேவையானவர்களுக்கு மட்டும் தான் வருவேன் என்று உண்மையாக என்னை நம்புகிறார். அதை நான் எப்போதும் சிறியளவும் பிசகாமல் காப்பாற்ற வேண்டும் என்பதே என் கொள்கையாக வைத்துள்ளேன். எப்போது அவரை நான் பார்க்க சென்றாலும் என் முகத்தை பார்த்தே சாப்பிட்டிருக்கானா! பசியோடிருக்கானா! என




கண்டுபிடித்துவிடுவார். உடனே நான் பசியோடு இருந்தால் சாப்பிடவைத்துவிடுவார். ஒரு தடவையாவது பார்த்து பேசிவிடவேண்டும் என்று நினைத்த என்னை, இன்று அவர் பக்கத்திலேயே வைத்திருக்கிறார். இதை விட வேறு என்ன வேண்டும் எனக்கு. என் நோக்கம், என் எண்ணம், என் தேவை, அவருக்கு தெரியாமல் போய்விடுமா என்ன?

தன்னுடைய மனித நேய அறக்கட்டளையின் மூலம் ஏராளமான சமுதாய பணிகள் செய்து வந்தாலும், தமிழ் நாடு முழுவதும் ஆங்காங்கே சமுதாய பணிகள் செய்து கொண்டிருக்கும் தொண்டு நிறுவனங்களை ஊக்கப்படுத்தி, அவர்கள் தொடர்ந்து சமுதாய பணிகள் செய்திட, சத்தம் இல்லாமல் உதவிகள் செய்து வருகிறார். இதற்கெல்லாம் பெரிய மனசு வேண்டும். ஒரு முறை, ஜனவரி 2, 2011ம் ஆண்டு பட்டாபிராம் இந்துக் கல்லூரியில் NDSO- எண்ணங்களின் சங்கமம் சார்பாக 1000 தொண்டு நிறுவனங்கள் ஒன்று கூடும் நிகழ்விற்கு நானும், சைதை துரைசாமி ஐயாவும் ஒன்றாக செல்வதற்கான வாய்ப்பு எனக்கு கிடைத்தது. இவ்விழாவிற்கு சைதை துரைசாமி ஐயா அவர்கள் தான் முதன்மை விருந்தினர். விழா நடக்கும் கல்லூரி வளாகத்தின் அருகில் சென்றுக்கொண்டிருந்த போது, என்னிடம் நிகழ்ச்சி எப்ப ஆரம்பம்... Time இருக்கா என்றார்... உடனே நான் 10 மணிக்கு ஆரம்பம்... இன்னும் 20 நிமிடம் இருக்கு என்றேன். உடனே காரை நிறுத்தச் சொன்னார், இறங்கி நடந்தார். அங்கே, கல்லூரி மாணவிகள் கபடி விளையாடிக்கொண்டிருந்தனர். சைதை துரைசாமி ஐயா அவர்கள் கபடி விளையாட்டை ரசித்துப் பார்த்ததோடு மட்டுமல்லாமல், அவர்களை தன்



அருகில் அழைத்து ஊக்கத்தொகை கொடுத்து, பாராட்டி வருங்காலத்தில் உங்களைப் போல் உள்ளவர்கள்தான் நம் பாரம்பரிய விளையாட்டை காப்பற்ற வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். அச்சமயத்தில் தமிழ் கலாச்சாரம் காப்பற்றப்படவேண்டும் என்ற அவரின் ஏக்கத்தை என்னால் உணரமுடிந்தது. தனக்கு கிடைக்கும் கொஞ்சநேரத்தையும் மற்றவர்களை ஊக்குவிப்பதில் இவருக்கு நிகர் இவரே. சரியாக 5 நிமிடங்களுக்கு முன்பு (9.55 மணிக்கு) விழா அரங்கிற்கு வந்து சேர்ந்தோம். விழாவில் சமூக சேவை செய்யும் சமூக ஆர்வலர்களான தாங்கள் எல்லோரும் ஆரோக்கியத்தை முதலில் பேணிக்காக்கவேண்டும் என அக்கறையுடன் அவர் கேட்டு கொண்டவிதம் எல்லோரையும் நெகிழவைத்தது. தான் சொல்லும் சொல்லோடு மட்டுமல்லாமல், செயலிலும் அதற்கு ஏற்றார் போல்தான் வாழ்ந்து வருகிறார்.

வரும் பிப்ரவரி 16 ம் தேதி சைதை துரைசாமி ஐயா அவர்கள் 69 வயதை தொடப்போகிறார் என்பதை என்னால் நம்பவே முடியவில்லை. யாராலும் நம்ப முடியாது. 39 வயது இளைஞரை போல் இளமையாகத்தான் உள்ளார். என் அனுபவத்தில், நிறைய நேரங்களில் இவர் நடந்து சென்றால், நான் ஓடுவேன். பஞ்சபூதங்களின் அடிப்படையில் தன் உடலையும் மனதையும் தவமாக பாதுகாத்து வருகிறார். அவருடைய ஆரோக்கியப் பராமரிப்பை நான் பின்பற்றவேண்டும் என விருப்பமாக உள்ளேன்.

இப்படி அவரிடம் இருந்து நான் கற்றதும், பெற்றதும் கொஞ்சம் நஞ்சம் அல்ல. நான் என்

**மணிபாலா. K.P**



# மாநகர தகப்பன் சாமி

உறுதியிலா
வாக்கு(றுதி)கள்
வாக்குகள் பெற்று
போக்குக்காட்டி
நேக்காய் நழுவும்
வழிப்போக்கர் நடுவே.....

உதவிகள் எல்லாம்
ஓட்டுக்களாய்
எண்ணும்
(கணக்கிட்டு எண்ணும்)
உதவாக்கரைகள் நடுவே.....

உள்ளமட்டும்
ஓட்டு மொத்தமாய்
உதவ
எண்ணும்
புரட்சித் தலைவர்
அணியுள் ஒருவர்....

பல தலை(வர்)கள்
கண்ட
சில தலை(வர்)களுள்
ஒரு தலை(வர்).....

சாமியப்பன்
குலசாமி.....
சைதை துரைசாமி.....
வெற்றி (யை) பெற்ற
(மாநகர) தகப்பன்சாமி....

காதலுக்கு (பிப்.14)....
இளையோன் (பிப்.16)

கடமை செய்திட
24 மணி நேரம்
அலைவோன்.......

கரூர்
கரு கொண்டு
கழகத்திற்குக்
கொடுத்த,
மல்லி(கா) கை
மணாளன்

கைநாட்டு
கையூட்டு
கட்சி வேட்டிகள்
நடவே...
நீ இதயக்கனி
எம்.ஜி.ஆர் மகவு....

உன் சொல்
செந்நெல் நடவு....
நோக்(கு)கம்
நேச நெசவு....
செயல்
நல தேசக்கடவு....
எதிராளியும்
பேசார் வசவு...

எளியோர்க்கு
இரங்கும்
இறங்கும் உன்
விழியில்
நீர் கசிவு

கல்விக்
கொடையாலும் நீ உயர்வு....
கரிசன மலிவு
மருந்திலும்
மாண்டோரையும்
குளிர்விக்கும்
உயர்விலும் நீ உயர்வு......

இங்கிலாந்து
துரையுடன்
எங்கள் துரை
விருந்தோ?!
நீ இந்தியர்க்கு
அருமருந்தோ?!

மனிதநேய
பயிற்சியோ?!
பயிற்சி தரும்
மனிதநேயமோ?!

ஆட்சியாளர்களை
உருவாக்கும் அரசியல்வாதி
கல்விப் பணியில் ஒரு
கழகப் பணியாளன்.....
வாழி நீ !.....
உன்னைப் பெற்ற
சைதை
நிஜமாய்
அதிர்ஷ்டசாலி.....!

*தந்தையை சிறு வயதிலிருந்தே அண்ணா என்றுதான் அழைப்பேன். சைதை துரைசாமி ஐயா அவர்களும் தன் தந்தையை அண்ணா என்றுதான் அழைப்பார் என்று நான் அறிந்து கொண்டபோது, இது பூர்வ ஜென்ம பந்தமான உறவுதானே. அவர் சிந்தனையில், அவர் எண்ணத்தில், அவர் நோக்கத்தில், வெறும் 10% நான் கடைபிடித்தாலே அதை என் வாழ்நாள் சாதனை என்றுதான் சொல்வேன்.*

*தெய்வத்தை நேசிப்பது எளிது நம்மை சுற்றியுள்ள மனிதர்களை நேசிப்பது அவ்வளவு சுலபமல்ல. அதையும் தாண்டி நேசிப்பவர்கள் தான் மனிதநேயமுடையவர்கள் என சத்குரு சொல்வதை போல் இதுவரை சைதை துரைசாமி ஐயா அவர்கள் தன் மனித நேய அறக்கட்டளையின் மூலம் சுமார் 300 க்கும் மேற்பட்ட IAS, IPS, IFS மற்றும் IRS மனித நேயமுள்ள அதிகாரிகளை உருவாக்கியுள்ளார். அத்தோடு, தன் அறக்கட்டளையின் மூலம் படித்த சுமார் 10,000 க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் தமிழக அரசு துறையில் பல்வேறு பொறுப்புகளில் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் தன்னுடைய இலவச திருமண மண்டபத்தில் கடந்த 14 ஆண்டுகளில் எவ்வித கட்டணமும் பெறாமல் சுமார் 5,000 க்கும் மேற்பட்ட ஏழை, எளிய மக்கள் திருமண விழா உட்பட பல சுப நிகழ்ச்சிகள் நடைபெற காரணமாக இருந்துள்ளார். சமூக மாற்றத்திற்காக தன் அறக்கட்டளையின் மூலம் ஒரு அமைதி புரட்சி செய்து வரும், மனித நேயர் சைதை துரைசாமி ஐயா, இன்னும் பல ஆண்டுகள், நலமோடும், வளமோடும் வாழ்ந்து ஏழை, எளிய மக்களின் வாழ்வாதார முன்னேற்றத்தை ஏற்படுத்த கூடிய வகையில், வருங்காலத்தில் அவரின் ஒரு கையொப்பம் அமைய வேண்டும் என்பது என் பிரார்த்தனை...* ●

***நன்றியுடன் முகவரி ரமேஷ்***




# உங்களை நீங்களே ஊக்கப்படுத்திக் கொள்ளுங்கள்

**நமக்கு நாமே சொல்லிக் கொள்கின்ற நம்பிக்கை வார்த்தைகள் நம்மிடம் புதியசக்தியை ஏற்படுத்திவிடும். விடாதே, தொடர்ந்து செல், வெற்றி அருகில்தான்! நமக்கு நாமே துணை, சுற்றியிருக்கும் இருளுக்கு நாமே விளக்கு என்ற நம்பிக்கையை நமக்கு நாமே ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.**

**வா**ழ்வில் மிகவும் சிக்கலான அல்லது சறுக்கலான சமயங்களில் நமக்கு எதுவுமே கைகொடுக்கவில்லையென்று உணருகின்ற தருணத்தில் நாம் திணறித்தான் போகிறோம். அந்த தருணத்தில் திக்கற்றக் காட்டில் மாட்டிக் கொண்டோம் என்றால் அப்போது எங்கோ ஒரு தூரத்தில் தெரியும் குடிசை விளக்கின் ஒளி நமக்கு எவ்வளவு நம்பிக்கையும், ஆறுதலையும் தருகின்றது!

அதுபோல நமக்கு நாமே சொல்லிக் கொள்கின்ற நம்பிக்கை வார்த்தைகள் நம்மிடம் புதியசக்தியை ஏற்படுத்திவிடும். விடாதே, தொடர்ந்து செல், வெற்றி



ரமேஷ்

அருகில்தான்! நமக்கு நாமே துணை, சுற்றியிருக்கும் இருளுக்கு நாமே விளக்கு என்ற நம்பிக்கையை நமக்கு நாமே ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

ஸ்டீவன் கல்லகன் என்பவர் ஒற்றைமனிதராய் மாபெரும் அட்லாண்டிக் கடலைத் தனிப்படகில் கடப்பதற்காகப் புறப்பட்டார். வழியில் படகு பழுதாகி உடைந்து மூழ்கியது. உடைந்த படகு துண்டு ஒன்றை பிடித்துக் கொண்டு கடலில் தத்தளித்தார். கப்பல் எதுவும் வரவில்லை. உணவில்லை. துணையில்லை. இருளும், கடலின் கொடூரமும் அவரை மிரட்டின.

இந்த நிலையில், 78 நாட்கள் அலைகடலில் சிறு துரும்பாய்த் தத்தளித்தார். மிகவும் மெலிந்து போய்விட்டார். ஆனால் அவரின் மனஉறுதி சிறிதும் குறையவில்லை. ஆமாம்! அதுதான் அவரைக் காப்பாற்றியது.

பின்னர் அவர் சொல்கிறார், ''என்னால் இதைச் சமாளிக்க முடியும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்திக் கொண்டேன். இதை எனக்கு நானே அடிக்கடி சொல்லிக் கொள்வேன். இவ்வாறு மன உறுதியை நான் வளர்த்துக் கொண்டேன்''. பேசுவதற்கு, ஆறுதல் பெறுவதற்கு யாரும் இல்லாத வேளையில், தனக்கு தானே பேசிக் கொண்டார். தனக்குத் தானே துணையாயிருந்தார்.

இதுபோன்ற சூழ்நிலைகள் கடலில் இல்லாவிட்டாலும், வாழுமிடத்தில், நமக்கு சில வேளைகளில் வரத்தான் செய்கின்றன. எல்லோருமே விட்டுவிட்டுப் போய்விட்டார்கள். நம் காயத்திற்கு நாம்தான் மருந்து இட்டுக் கொள்கின்ற நிலை. நம் கண்ணீரை நாம்தான் துடைக்க வேண்டிய கட்டாயம். அப்போதும் மறக்க வேண்டாம், நமக்குத் துணையாக, மூழ்காத தெப்பமாக, அணையாத விளக்காக ஒருவர் துணையிருக்கின்றார். அவர் நாம் தான்.

நம்மை நாமே தூண்டிக்கொள்கின்ற போது அசாத்தியமான சக்தி எங்கிருந்தோ நம்மிடம் ஏற்பட்டுவிடுகிறது. புதிய உயிர்ச் சக்தியை நாம் பெற்றுவிடுகிறோம். அதனால் நாம் மாற்றம் பெற்று விடுகிறோம். சாமானிய மனிதர் ஒருவர் இதை தன்னுடைய வாழ்வில் கடைபிடித்தார். தனக்கு தானே நம்பிக்கை ஏற்படுத்திக்

கொண்டு, புதிய சக்தியை உருவாக்கி கொண்டார். அதன் மூலம் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தினார். அந்த சாமானியனின் சாதனையை நாம் கண்டிப்பாக தெரிந்துக் கொள்ளவேண்டும்.

சேலம் மாவட்டம் ஆத்தூர் தாலுக்காவை சேர்ந்தவர் ரமேஷ், வறுமையான விவசாய குடும்பத்தில் பிறந்தவர். மிகுந்த வறுமை யில் தனது பள்ளிப்படிப்பை தினம் ஐந்து கி.மீ. தூரம் நடந்துசென்று படித்தார். பள்ளியில் அறிவியல் ஆய்வுக் கூடங்களுக்கு காலில் காலணி இல்லாமல் உள்ளே அனுமதிக்கமாட்டார்கள்.

அப்போது மற்ற குரூப் மாணவர்களிடம் காலணியை கடன் வாங்கிப் போட்டு கொண்டு அந்த வகுப்பு முடிந்ததும் திரும்பக் கொடுத்துவிடுவார். அவரது தம்பியும் இவரும் ஒரே பள்ளியில் படித்த போதும் அவர்களுக்கு ஒரே ஒரு சீருடைதான் இருந்தது; அதை அணிந்துக் கொண்டு அவர்களுடைய பள்ளி வாழ்க்கை கழிந்தது.

வறுமையின் கோர தாண்டவத்தால் யாராவது ஒருவரைத் தான் கல்லூரியில் படிக்க வைக்கக்கூடிய சூழல் குடும்பத்தில் நிலவியது. அப்போது ரமேஷின் தம்பி நான் வேலைக்கு போகிறேன், என் அண்ணன் படிக்கட்டும் என்று விட்டுக் கொடுத்தார்.

கல்லூரியில் சேர்ந்த பின்பு ரமேஷ்க்கு அணிந்து செல்ல சரியான ஆடைகள் இல்லாத நிலையில் அவருடைய நண்பர்கள் இரண்டு ஆடைகளை கொடுத்து உதவினார்கள்.

ஆனால் கல்லூரியில் படித்த மற்ற மாணவர்கள் விதவிதமான ஆடைகளுடன் வரும்போது ரமேஷ் மனதளவில் பாதிக்கப்பட்டு கல்லூரிக்கு செல்லாமல் வீட்டிலே இருந்தார். இதை அறிந்த அவரது தந்தை கல்லுடைக்கும் வேலைக்கு சென்று அதன் மூலமாக கிடைத்த பணத்தை கொண்டு துணிகளை வாங்கி தந்து கல்லூரிக்கு அனுப்பினார்.

ஆனால் தன் குடும்பத்து வறுமையை விரட்ட வேண்டும் என்றால் தான் நன்றாக படித்தால் தான் முடியும் என்ற முடிவு செய்தார். கல்லூரியில் அனைத்திலும் முதலாவதாக வந்தார். அதனால் கல்லூரியில் சிறந்த மாணவன் விருது, துறையின் முதல் மாணவன் விருது என எல்லா விருதுகளையும் பெற்றார்.

இந்த நிலையில் கல்லூரி இறுதி தேர்வு வந்தது அதில் ஒரே ஒரு பாடத்தில் தோல்வியடைந்ததாக எதிர்பாராத விதமாக தேர்வு முடிவு வந்தது. இது ரமேஷ்க்கு மிகப்பெரிய அதிர்ச்சியாக அமைந்தது. கல்லூரியின் சிறந்த மாணவன் விருது வாங்கியவர் தேர்வில் தோற்றுவிட்டார் என விமர்சித்தார்கள். அதனால் கேலி கிண்டல்களுக்கு ஆளானார்.

இது அவருக்கு பெரும் மனவலியை தந்தது. மறுகூட்டலுக்கு விண்ணப்பித்துவிட்டு காத்திருந்தார். வீட்டிற்கு சென்றால் பெற்றோர்கள் வருந்துவார்களே என்று நினைத்து கொண்டு கல்லூரி விடுதியிலே தங்கி இருந்தார். மறுகூட்டலுக்குப் பின் **78** மதிப்பெண்கள் எடுத்து தேர்ச்சி பெற்றார்.

இந்த சமயத்தில் வீட்டிற்கு வந்த ரமேஷ் தனது அக்காவிற்கு திடீரென்று ஏற்பட்ட இதயநோயால் அதிர்ச்சி அடைந்தார். தன்னுடைய கிராமத்தில் எந்த ஒரு மருத்துவ வசதியும் இல்லாத காரணத்தாலும், மருத்துவ செலவுக்கு பணம் இல்லாத காரணத் தாலும் தகுந்த சிகிச்சை அளிக்காமல் தனது அக்காவை இழந்தார். அக்காவின் மரணம் ரமேஷை மிகவும் பாதித்தது.

கல்லூரி படிப்பை படித்த ரமேஷ் சி.ஏ படித்துவிட்டு ஒரு சிறந்த ஆடிட்டர் ஆக வேண்டும். அதன் பிறகு தனது கிராமத்தில் வறுமையால் கல்வியை தொடர முடியாத பலருக்கு உதவ வேண்டும் என்பதை தனது இலக்காக தீர்மானித்தார்.

அவரது கிராமத்தை சேர்ந்த ஒரு பெண் பத்தாம் வகுப்பில் நல்ல மதிப்பெண் எடுத்திருந்தார். ஆனால் மேலும் படிக்க வைக்க குடும்பத்தாரால் இயலவில்லை. இதை கேள்விப்பட்ட ரமேஷ் நண்பர்களிடம் பண உதவி பெற்று பள்ளியில் சேர்த்துவிட்டார். அந்த பெண் **12**ஆம் வகுப்பில் **1136** மதிப்பெண்கள் எடுத்து தேறினார். அவரை டாக்டர் ஆக்க வேண்டும் என்று முடிவு செய்தார்.

மேலும் தனது அக்காவின் மரணத்தை போன்று தனது கிராமத்தில் மீண்டும் ஒன்று ஏற்பட்டுவிடக்கூடாது என்பதில் தீர்க்கமாக இருந்தார். அதற்காக தன்னுடன் கல்லூரி நண்பர்களை எல்லாம் சேர்த்து கொண்டு அப்பெண்ணை டாக்டராக்குவது என முடிவு செய்தார்.

அந்த சமயத்தில் ரமணா திரைப்படம் வெளிவந்தது. அந்த திரைப்படம் ரமேஷ்க்கு மிகவும் தாக்கத்தை ஏற்படுத்தியது. அத்திரைப்படத்தை எடுத்த இயக்குநர் திரு.முருகதாஸ் இதற்கு உதவுவார் என்ற நம்பிக்கையில் அவரை சந்தித்தார். அவரின் உதவியும் பெற்று அப்பெண் செங்கல்பட்டு மருத்துவக்கல்லூரியில் மருத்துவம் பயில இடம் கிடைத்தது.

அந்த சம்பவம் அவரது கிராமத்தில் மிகுந்த மகிழ்ச்சியை ஏற்படுத்தியது. அதுமட்டுமல்ல அங்குள்ள மாணவர்களுக்கு கல்வியை நோக்கி செல்ல ஒரு ஊக்கசக்தியாக அமைந்தது.

வேளச்சேரியில் ஒரு வாடகை வீட்டில் வசித்து வந்த ரமேஷ் கல்வி குறித்த எந்த உதவிகளுக்கும் என்னை அணுகலாம் என்றார். அந்த முகவரியை நம்பி மாணவர்கள் பலர் கல்விக்காக ரமேஷை அணுக ஆரம்பித்தார்கள்.

சி.ஏ படித்துக் கொண்டே ஆடிட்டர் அலுவலகத்தில் ஒரு சிறிய வேலையும் பார்த்துக் கொணடிருந்த ரமேஷ் தனது குடும்ப பொருளாதார சூழ்நிலையில் எப்படி இந்த மாணவர்களுக்கு எல்லாம் உதவுவது என்று கவலையடைந்தார். இருந்தபோதும் தன்னுடைய முகவரியை தேடி வரும் மாணவர்களுக்கு ஒரு சிறந்த முகவரி கிடைக்க வேண்டும் என்று முடிவு செய்து 2006-ல் அப்துல்கலாம் அவர்களின் பிறந்த நாளில் 'முகவரி' என்ற அமைப்பை தொடங்கினார்.

அடுத்தடுத்த வருடங்களில் முகவரியால் தங்களை உயர்த்திக் கொண்ட மாணவர்களின் எண்ணிக்கையும் கணிசமாக உயர்ந்தது. தன்னை தேடிவரும் மாணவர்களுக்கு தொடர்ந்து கல்விக்காக உதவ பல்வேறு புரவலர்களை அணுக ஆரம்பித்தார். ஆனால் உன் வாழ்க்கையே வறுமையில் இருக்கும் போது இதெல்லாம் உனக்கு தேவையா? என்ற எத்தனையோ விமர்சனங்களையும், அவமானங் களையும் தாண்டி தனக்கு தானே நம்பிக்கை ஏற்படுத்திக் கொண்டு முகவரியை தொடர்ந்து நடத்தினார்.

கனவு என்பது நிகழ்காலத்திற்கான கனவாக இருக்க கூடாது, அப்படி இருந்தால் அது கனவே அல்ல. கனவு பெரிதாக இருந்தால் தான் தலைமுறைகள் தாண்டியும் அதன் பலன் சென்றடையும் என்று

முடிவு செய்த ரமேஷ் தனது அமைப்பு மூலமாக 400க்கும் மேற்பட்ட மாணவர்களின் வாழ்வில் உயர்கல்வி என்ற ஒளியை ஏற்றி உள்ளார். அதில் 42 பேர் அரசு பணிகளில் இருந்து வருகிறார்கள். 108 மாணவர்கள் மருத்துவம் படித்து வருகிறார்கள். மற்றவர்கள் பொறியியல் மற்றும் மற்ற உயர்கல்வி படிப்புகளை படித்து வருகிறார்கள்.

தன்னுடைய தொடர் முயற்சியாலும் தன்னைத்தானே ஊக்கப்படுத்தி கொள்ளும் திறனாலும் ஒரு விதையாக போடப்பட்ட முகவரி இன்று ஒரு மிகப்பெரிய ஆலமரமாக வளர்ந்துள்ளது. அந்த வெற்றிக்கு மிக முக்கிய காரணம் ரமேஷின் தன்னம்பிக்கை, நேர்மை, நன்றியுணர்வு மற்றும் முகவரியின் வெளிப்படையான தன்மை என்பது குறிப்பிடத்தக்கது.

இதனால் முகவரியை நோக்கி எண்ணற்ற புரவலர்கள் உதவ முன் வந்தார்கள். முகவரியின் மூலமாக படித்த மாணவர்கள் நல்ல நிலையை அடைய வேண்டும் என்பது மட்டும் எங்கள் நோக்கம் அல்ல, மனித நேயமும், சமூக அக்கறையும் கொண்ட மாணவர் களாக உருவாக வேண்டும் என்பதிலும் முனைப்பாக உள்ளேன். அதுமட்டுமல்ல ஏழை மக்களுக்காக நேர்மையாக பணி செய்யும் அரசு அதிகாரிகளையும், மனிதாபிமானத்துடனும் கருணையுடனும் சேவை செய்யும் மருத்துவர்களையும் உருவாக்க வேண்டும் என்பது மட்டுமே எங்களது லட்சியம் என்கிறார் முகவரி ரமேஷ்.

வறுமையில் பிறந்து, வளர்ந்து, மருத்துவ வசதி இல்லாத காரணத்தால் தனது சகோதரியை இழந்து தனக்கு தானே நம்பிக்கையூட்டி கொண்டு முகவரி என்ற அமைப்பு மூலமாக பல மருத்துவர்களையும், அரசு அதிகாரிகளையும் உருவாக்கி இளம் வயதிலே சாதித்து மாற்றத்தை நோக்கி தன்னம்பிக்கையுடன் பயணிக்கும் ரமேஷ் என்ற சாமானியனின் சாதனை இன்றைய இளைஞர்களுக்கு தன்னம்பிக்கையூட்டும் உன்னத பாடமாகும்.

தன்னம்பிக்கையும், நேர்மையும், மனித நேயமும் கலந்திருக் கின்ற மனிதர்கள் மேற்கொள்ளும் பயணம் சுற்று வழிபோல தெரியலாம். ஆனால் அதுதான் நம்மையும் எதிர் நிற்பவர்களையும் ஒரு சேர உயர்த்தும் வழி, அது நேர்வழி, அதுதான் வெற்றியின் வழி.

–

**ஈஷா தமிழ் வலைப்பதிவு (20.12.2018) மற்றும்
ஈஷா காட்டுப் பூ (ஜனவரி 2019) சத்குருவைப் பற்றி
"முகவரி" ரமேஷ்**

Home (/In/Ta) / Blog (/In/Ta/Blog) / Article (/In/Ta/Wisdom-Intermediate/Article) / சத்...

# சத்குரு என்னிடம் பேசிய முதல்வார்த்தை... சிலாகிக்கும் முகவரி ரமேஷ்!

பகுத்தறிவு பேசித்திரிந்த தனது இளம்பிராயம் முதல் சத்குருவிடம் சம்யமா தீட்சைபெற்று முகவரி ரமேஷாக தான் பரிமாற்றம் அடைந்ததுவரை நம்முடன் பகிர்ந்துகொள்ளும் திரு.முகவரி ரமேஷ் அவர்கள், சத்குருவை சந்தித்த தருணங்கள் பற்றியும், தன்னுடன் அவர் பகிர்ந்துகொண்ட வார்த்தை பற்றியும் விவரிக்கிறார்!



சேலம் மாவட்டம், ஆத்தூர் - தலைவாசல் பகுதியில் உள்ள ஆராத்தி அக்ரஹாரம் என்ற குக்கிராமமே என் பூர்வீகம். சின்ன வயதிலிருந்தே எனக்குப் பெரிதாக கடவுள் நம்பிக்கை கிடையாது. அம்மா, அப்பா அடிக்கடி கோயிலுக்குப் போகச் சொன்னாலும், அதையெல்லாம்



நான் பொருட்படுத்தியதில்லை. புரிதல் இல்லாமல், திராவிடம், கம்யூனிசம் என்று பேசிக்கொண்டிருந்த காலம் அது.

2004 டிசம்பர் மாதத்தில் மனரீதியாக மிகவும் பாதிக்கப்பட்டிருந்தேன். அப்போது நடந்த சில சம்பவங்கள் என்னை எதிர்மறையாக சிந்திக்க வைத்ததோடு மட்டுமல்லாமல், தாங்கமுடியாத வலியையும் எனக்கு கொடுத்திருந்தது. தற்கொலை செய்து கொள்ளும் மனநிலையில் கூட இருந்தேன். அந்த நேரத்தில்தான் என் நண்பர் அசோக், ஈஷா யோகா பயிற்சி வகுப்பு பற்றிய நோட்டீஸ் ஒன்றை என் கையில் திணித்தார்.

எனக்குள் ஏதோ ஒரு தயக்கம்! என் தம்பி லட்சுமணனின் தொடர் வற்புறுத்தலின் பேரிலேயே, நான் 2005 ஜனவரி மாதம் 29ம் தேதி மயிலாப்பூரில் நடந்த ஈஷா அறிமுக வகுப்பிற்குச் சென்றேன். அப்போது அங்கிருந்த சுவாமி சுயக்னாவிடம் நான், இந்த யோகா பயிற்சிக் கட்டணத்திற்கு ரூ.550 வாங்குகிறீர்களே. இதில் உங்களுக்கு எவ்வளவு பணம் தருவார்கள், புகைப்படத்தில் இருக்கும் தாடிக்காரருக்கு (சத்குரு) எவ்வளவு போகும் என்று அறியாமையில் கேட்டேன். அதற்கு சுவாமி சுயக்னா கொஞ்சம் கூட கோபப்படாமல், 4 வருடம் ஈஷா ஆசிரியர் பயிற்சி வகுப்பில் கலந்து கொள்ளுங்கள், யாருக்கு எவ்வளவு என்று உங்களுக்கே புரியும் என்று சொன்னார். அதற்கு பின்பு நான் படிப்படியாக பாவ-ஸ்பந்தனா, ஹட யோகா, சம்யமா போன்ற உயர் வகுப்புகளில் வரிசையாக பயிற்சி எடுத்தேன், உடல் ரீதியாக முன்னேற்றம் பெறுவதை உணர்ந்தேன். சம்யமா வகுப்பில் நான் கலந்துகொண்டபோது அனைவருக்கும் சத்குரு சம்யமா தீட்சை கொடுத்ததும், அவரிடமிருந்து ஆனந்த கண்ணீர் பொங்கிவந்தது. சத்குருவின் தாயுள்ளத்தை அப்போது அறிய முடிந்தது. அது எனக்குள் ஒரு புதிய புரிதலை உருவாக்கியது. அறிவை விட அருளே முக்கியம் என நான் உணர்ந்த தருணம் அது. அத்தருணம்தான் எனக்கான திருப்புமுனை.

# முகவரி தந்த குருவருள்!

இன்று சமூகத்தில், முகவரி பவுண்டேஷன், 360 மாணவர்களுக்கு உயர் கல்வி கொடுத்து, இதில் 70 மாணவர்கள் மருத்துவமும், 2 பேர் சிவில் சர்வீஸ் தேர்வில் பயிற்சி பெற்றும், 100க்கும் அதிகமானவர்கள் படித்து முடித்து அரசு மற்றும் தனியார் வேலைகளில் இருக்கிறார்கள் என்றால், அது சத்குரு அவர்களின் கருணைதான்... அத்தோடு வாழ்க்கையில் எந்த ஒரு பிடிப்பும் இல்லாமல் இருந்த என்னை ஒவ்வொரு நாளும் அவருடைய அருளால், வழிநடத்திக் கொண்டு செல்வதும் சத்குருவே... 2006 ல் முகவரியில் மாணவர்கள் எண்ணிக்கை 7 பேர், இக்குழுவிற்கு பெயர் வைப்பதில் எனக்குள் ஓர் குழப்பம்... அமைதிப்புரட்சி, கல்விப்புரட்சி, தேடல், என பல பெயர்கள் மனதில் வந்தாலும் ஏதோ திருப்தியில்லாமல் இருந்தேன். அச்சமயத்தில் ஈஷா மையம் சென்று இருந்தேன். தியானலிங்க கோவிலில் ஒரு அரை மணிநேரம் தியானம் செய்துவிட்டு, வெளியில் வரும்போது முகவரி என்ற ஒரு ஸ்பார்க் என்னுள் தோன்றியது. அப்படித்தான் முகவரி என்ற பெயர் வந்தது.

2007 ஆகஸ்டில், முகவரியில் மாணவர்களின் எண்ணிக்கை 21 பேர். அப்போது நானும் C.A படித்துக் கொண்டிருந்த மாணவன்தான். அச்சமயத்தில் நெருக்கடியான பொருளாதார சூழ்நிலை. இந்த சூழ்நிலையில் முகவரியை நடத்தலாமா, வேண்டாமா? முகவரியா, C.A -வா? என எனக்குள் ஒரு கேள்வி. ஆகஸ்ட் 31-ம் தேதி முகவரி மாணவர் தம்பி வெற்றிவேலிடம், நீ சொல்லும் வார்த்தையையே, நான் சத்குருவின் வாக்காக எடுத்துக்கொள்கிறேன், எனச் சொல்லி தெளிவான அறிவுரை சொல்லும்படி கேட்டேன் (வெற்றிவேலிடம் உண்மை தன்மை இருந்த காரணத்தினால்). வெற்றிவேலும், உங்களுக்கு தற்போது பொருளாதார சிக்கல் இருந்தாலும், உங்கள் இயல்புக்கு C.A - வை விட முகவரியை தொடர்ந்து நடத்துவதுதான் சரியாக இருக்கும் என தெளிவாக கூறினார். அவரின் சொல்லை சத்குருவின் வாக்காக எடுத்துக்கொண்டு செயல்பட ஆரம்பித்தேன்.

செப்டம்பர் 23, 2007ல் சென்னை அண்ணா பல்கலைக் கழகத்தில் நடந்த ஈஷா கிராமோத்சவ விழாவிற்கு 40 மாணவர்களை எங்கள் ஊரிலிருந்து அழைத்துக் கொண்டு வந்தேன். அவர்களை ஊருக்குத் திருப்பி அனுப்ப பணம் இல்லாமல் கஷ்டப்பட்டு போராடி நண்பர்கள் உதவியினால், ஒரு வழியாக ஊருக்கு அனுப்பி வைத்தேன். சரியோ, தவறோ உங்களை நம்பிதானே முகவரியை தொடர்ந்து நடத்த ஆரம்பித்தேன், எனக்கு மறுபடியும் கஷ்டமான சூழ்நிலையா? என நினைத்து சத்குரு ஃபோட்டோ முன்பு நின்று கண் கலங்கினேன். சரியாக 4 நாட்கள் கழித்து செப்டம்பர் 27, 2007 அன்று சைதை துரைசாமி ஐயா அவர்கள் - எப்போதோ நான் முகவரி மாணவர்களின் கல்வி உதவிக்காக எழுதிய கடிதத்திற்காக - தொடர்பு கொண்டார். 'முகவரிதான் என் இயல்புக்கு சரியாக இருக்கும்' என்று சொன்ன தம்பி வெற்றிவேலுக்கே ஃபோன் செய்தார். முகவரி மாணவர்கள் தங்கி படிக்கவும், அவர்களின் உணவுக்கும் உதவ அவர் முன்வந்தார். இவன் தாக்குபிடிக்கிறானா, இல்லையா? என எனக்குள் ஒரு சோதனையை உருவாக்கி, என் கண்ணீரைத் துடைத்தது மட்டுமல்லாமல் இன்றுவரை முகவரியை அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்ல அடிப்படையான கட்டமைப்பை உருவாக்க, மனிதநேயர் சைதை துரைசாமி அய்யா மூலமாக அருள் புரிந்தவர் சத்குருவே.

## சத்குருவை நினைத்ததும் நிகழ்ந்த அற்புதங்கள்!

ஜுன் 26, 2012-ல் முகவரி பவுண்டேஷனுக்கு வருமானவரி விலக்கு கேட்டு, சேலம் வருமானவரி அலுவலகத்திற்கு போயிருந்தேன். அந்த தினத்தில் என் ஆடிட்டர் ஊரில் இல்லை. நான் மட்டுமே தனியாகச் சென்று எல்லா கணக்குவழக்குகளையும் சரியாக சமர்ப்பித்தும், ஏதோ எதிர்பார்த்து 6 மாதம் ஆகட்டும் பார்க்கலாம் என்று சொன்னார்கள். என்ன செய்வது என்று தெரியாமல், வெளியே சோபாவில் அமர்ந்து ஒரு நிமிடம் அமைதியாக கண்களை மூடிக்கொண்டு சத்குருவை மட்டுமே நினைத்தேன். அடுத்த நிமிடத்தில் ஒரு நேர்மையான உயர் அதிகாரி என்னை அவரின் அறைக்கு அழைத்து ஏதோ ஒரு சட்டப் புத்தகத்தை

எடுத்துப்பார்த்துவிட்டு, இப்போதே முகவரி பவுண்டேஷனுக்கு வருமானவரி விலக்கு (80 G) சான்றிதழ் தருகிறேன் என கையொப்பம் இட்டார். என்ன ஒரு அருள், முகவரி மேல் சத்குருவுக்கு...

2014 மார்ச் மாதத்தில் 42 நாட்கள் சிவாங்கா விரதம் இருந்து வெள்ளியங்கிரி மலைக்குச் செல்ல ஆயத்தமாக இருந்தேன் அச்சமயத்தில் என் இடது காலில் எலும்பு முறிவு ஏற்பட்டிருந்தது, இச்சமயத்தில் மலைக்குச் செல்லவேண்டாம் என எல்லோரும் என்னை பயமுறுத்தினார்கள். நானோ வெள்ளியங்கிரி மலைக்குச் சென்றே தீருவேன் என ஒரே பிடிவாதமாக இருந்தேன். வேறு வழியில்லாமல் என்னுடன் வந்த முகவரி மாணவர்கள் எனக்கான மருத்துவ உபகரணங்களை எடுத்து வந்தனர். காலை 5 மணிக்கு குருபூஜையை முடித்துவிட்டு செல்ல ஆரம்பித்த எனக்கு மலை ஏறி திரும்பி கீழே வரும்வரை எடுத்துச்சென்ற மருத்துவ உபகரணங்களைப் பற்றிய நினைப்பே இல்லாமலும், எவ்வித வலியும் இல்லாமலும், நல்லபடியாக சிவனை பார்த்துவந்தேன். இது சாத்தியமானதென்றால் சத்குரு மீது நான் வைத்திருந்த என் நம்பிக்கையே...

## என் ஏக்கம் சத்குருவிற்கு எட்டியது!

2018 அக்டோபர் மாதத்தில் இமயமலைக்கு பயணம் சென்று வரும் ஒரு வாய்ப்பு கிடைத்தது. உத்திரகாசி, கங்கோத்ரி, பத்ரிநாத், குப்தகாசி என ஒவ்வொரு இடத்தையும் நன்கு பார்க்க, உணர முடிந்த என்னால், கேதார்நாத்தை சரியாக உணர முடியாமலும், உள்வாங்க முடியாமலும் இருந்தேன். ஒரு வித ஏக்கத்துடன் அன்று இரவு கேதார்நாத்தில் தங்கியிருந்தேன் (காரணம் என் நண்பர்களுடன் ஹெலிகாப்டருக்காக காலை 8 மணியிலிருந்து மாலை 4 மணி வரை காத்திருந்தும், சரியான மேக சூழ்நிலை அமையாத காரணத்தினால் ஒரு வழியாக மாலை 5.30 மணிக்குத்தான் எங்களால் கேதார்நாத்துக்கு செல்லமுடிந்தது. ஹெலிகாப்டரில் ஏறிய சமயத்தில் ஒரே மழை. அச்சமயத்தில் பைலட் what can I do? என சொல்கிறார். நான் பயத்தில் சத்குருவை நினைத்து `பிரம்மானந்த ஸ்வரூபா' மந்திரம் சொல்லிக்கொண்டே இருந்தேன், எப்படியோ நல்லவிதமாக போய் சேர்ந்தோம். மறுநாள் காலை 4 மணிக்கு சுந்தரமூர்த்தி அண்ணாவின் உதவியால் கேதார்நாத் கருவறையிலேயே 30 நிமிடங்கள் இருக்கும் வாய்ப்பு இயல்பாகவே அமைந்தது. இவ்வளவு தூரம் வந்தும் கேதார்நாத்தை சரியாக உணரமுடியாமல் போய்விடுவோமோ என்று ஒரே ஏக்கத்தில் இருந்தேன். நிச்சயம் என் ஏக்கம் சத்குருவிற்கு எட்டியிருக்கும். அக்டோபர் 6, 2018 அன்று எனக்கு கிடைத்த அந்த அற்புதமான கேதார்நாத் தரிசனத்திற்கு சத்குருவின் பெருங்கருணையே காரணம்.

**நாம் எடுத்துக்கொண்ட எந்த ஒரு செயலும் சுயநலம் இல்லாமல் உண்மையாக இருக்கும் பட்சத்தில், யாரோ ஒருவர் மூலமாக என்ன நடக்கவேண்டுமோ, அதை சரியான சமயத்தில் நடத்திக்காட்டுகிறார் சத்குரு.**

இது வரைக்கும் எத்தனையோ மீடியாக்களில் முகவரி பரவி வந்திருந்தாலும், எந்த ஒரு இடத்திலேயும் என் முகம் வருவதை நான் விரும்பியதில்லை. நாம் செய்கிற நல்ல விஷயங்கள் மட்டும் வெளியில் தெரிந்தால் போதும் என்று இருந்த எனக்கு, வருங்காலத்தில் திறமை மற்றும் ஆர்வமுள்ள அடித்தட்டு ஏழை பிள்ளைகளுக்காக ஒரு பள்ளிக்கூடம் கட்ட வேண்டும் என்ற ஆசை மட்டும் இருந்து கொண்டிருக்கிறது. அதற்காகவாவது வெளியில் வந்தாக வேண்டும் என நான் என் தங்கை சந்தியாவிடம் மட்டும் அடிக்கடி சொல்லிக் கொண்டிருப்பேன். சரி, அதற்கும் சத்குரு வழி காட்டுவார் என ஆணித்தரமாக நம்பினேன். அதே தங்கை சந்தியாவுடன் ஜுலை 22, 2018 அன்று நான் பேசிக்கொண்டிருந்த தருணத்திலேயே, முகவரியின் முதல் மாணவியை படிக்க வைத்த திரைப்பட இயக்குநர் ஏ.ஆர். முருகதாஸ் அண்ணாவின் அலுவலகத்திலிருந்து எனக்கு அழைப்பு. சர்கார் திரைப்படத்தில் ஒரு காட்சி உள்ளது. அக்காட்சியில் தாங்கள் வந்தால், எங்கள் மொத்த படக்குழுவும் சந்தோஷப்படுவோம் என்று சொன்னார்கள். அதே போல் சர்கார் திரைப்படத்தில் `ஒருவிரல் புரட்சி' என்ற பாடல் வழியாக முகவரி பவுண்டேஷனைப் பற்றி சரியான அங்கீகாரத்துடன் சொல்லப்பட்டு, நவம்பர் 6, 2018 (தீபாவளி) அன்று வெளியாகி, இன்று உலகளவில் முகவரி பவுண்டேஷனையும், முகவரி ரமேஷ் என்கிற என்னையும். ஏ.ஆர். முருகதாஸ் அண்ணா வழியாக கொண்டு சேர்த்தது சத்குருவின் கருணையே...

நாம் எடுத்துக்கொண்ட எந்த ஒரு செயலும் சுயநலம் இல்லாமல் உண்மையாக இருக்கும் பட்சத்தில், யாரோ ஒருவர் மூலமாக என்ன நடக்கவேண்டுமோ, அதை சரியான சமயத்தில் நடத்திக்காட்டுகிறார் சத்குரு. இதுவரைக்கும் முகவரி பவுண்டேஷன் மூலமாக 360 பேர் உயர்கல்வி படிப்பதும், அவர்கள் வேலைக்குச் செல்வதும், வருங்கால முகவரியின் கனவான பள்ளி தொடக்கமும், அதனுடைய வளர்ச்சியும், அதில் படிக்கப் போகும் ஆயிரக்காணக்கான மாணவர்கள் நேர்மையானவர்களாகவும், தன்னலமில்லாதவர்களாகவும் மற்றும் தலைமைப் பண்பு உள்ளவர்களாகவும் உருவாகுவார்கள் என்றால், அது சத்குருவின் கருணையினால் மட்டுமே நடக்கும் என்பதே என் ஆணித்தரமான நம்பிக்கை. (உதாரணமாக முகவரிக்கு ஒரு அலுவலகம் வேண்டுமென்று தேடிக்கொண்டிருந்த சமயத்தில் முகவரிக்கு உதவி செய்துவரும் தியானலிங்க பில்டர்ஸ் உரிமையாளரும் ஈஷா தன்னார்வாலருமான நாவுக்கரசு அண்ணா மூலமாக சிறப்பான அலுவலகம் அமைந்து, செப்டம்பர் 3, 2016 அன்று குருபூஜையுடன் தொடங்கி இன்று நல்லமுறையில் சத்குருவின் அருளால் செயல்படுகிறது)

# சத்குரு பேசிய முதல் வார்த்தை...

**என் குருவிடம் முகவரி பற்றி பேசிய அத்தருணத்தையே, என் வாழ்வில் உயர்வாக நினைக்கிறேன்.**

